ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளி, முதியோர் குடும்பத்தில்

# தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் உரிமைத்தொகை பெற விண்ணப்பிக்கலாம்: முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஆக.13–

மாற்றுத்திறனாளி ஓய்வூதியம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இம்மாதம் 18, 19, 20 ஆகிய தேதிகளில் விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் நடத்தினார். கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. முதற்கட்ட முகாம் ஜுலை 24–ம் தேதி முதல் ஆகஸ்ட் 4–ம் தேதி வரை நடைபெற்றது.

இரண்டாம் கட்ட முகாம்கள் ஆகஸ்ட் 5–ம் தேதி முதல் 14–ம் தேதி வரை நடைபெறும். இதுவரை ஒரு கோடியே 54 லட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. உரிய நாளில் விண்ணப்பம் பதிவு செய்ய வருகை புரிய இயலாத நபர்களுக்குச் சிறப்பு முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக்கூட்டத்தில் விண்ணப்பப் பதிவு முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் ஆய்வு செய்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிப்பதற்கு தகுதிகள் மற்றும் தகுதியின்மைகளை வரையறை செய்து ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் கடுமையாக உடல் பாதிக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால், பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையின் கீழ் சமூகப் பாதுகாப்பு திட்டத்தில் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கும், இந்தத் திட்டத்தில் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று முதலமைச்சரிடம் கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

## விதிவிலக்கு

இது குறித்து கனிவுடன் பரிசீலித்த முதலமைச்சர், வருவாய்த் துறையின் கீழ் மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் பெறும் மாற்றுத்திறனாளிகள் தவிர, அக்குடும்பத்தில் உள்ள தகுதிவாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறும் வகையில் விதிவிலக்கு அளிக்க ஆணையிட்டுள்ளார்.

22.7.2023 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம், 50 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம், இலங்கை அகதிகளுக்கான (முதியோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்) ஓய்வூதியத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு முதியோர் ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் ஓய்வூதியத்தை மாதத்திற்கு ரூபாய் 1200ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தில் யாரேனும் ஒரு நபர், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களிலும், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்திலும் முதியோர் ஓய்வூதியம் பெற்று வந்ததால், அக்குடும்பத்தில் உள்ள பெண்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற இயலாது என்று திட்ட விதி வகுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்த ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் விரிவாக ஆய்வு செய்தார்.

முதியோரின் கண்ணியமான வாழ்வை உறுதிப்படுத்த அரசு முதியோர் ஓய்வூதியத்தை வழங்குகிறது. முதியோரைப் பாதுகாக்க வேண்டியது ஒரு குடும்பத்தின் கடமை மட்டுமல்ல, சமூகத்தின் கடமை என்றும் அரசு கருதுகிறது. அதேவேளையில் அரசு வழங்கும் முதியோர் ஓய்வூதியத்தால், அந்தக் குடும்பத்தில் உள்ள தகுதியான பெண்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பலன் பெறுவது தடைபடக்கூடாது என்று முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

## 3 நாள் சிறப்பு முகாம்கள்

எனவே, இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய திட்டங்களில் முதியோர் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள ஓய்வூதியதாரர் அல்லாத தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

தற்பொழுது விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தலைவிகள், முதியோர் ஓய்வூதியத் திட்டங்களில் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களில் உள்ள தகுதிவாய்ந்த மகளிர் மற்றும் ஏற்கனவே முகாம்களில் பதிவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் வருகை புரிய இயலாத குடும்பத் தலைவிகள் விண்ணப்பங்கள் பதிவு செய்ய, ஆகஸ்ட் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். மேற்கண்ட வகை குடும்பங்களில் உள்ள பெண்கள் ஏற்கனவே விண்ணப்பித்திருந்தால், மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. இதுவரை விண்ணப்பிக்காத தகுதியான பயனாளிகள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், ஐ.பெரியசாமி, க.பொன்முடி, உதயநிதி ஸ்டாலின் மற்றும் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ்மீனா உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துரிதமாக செயல்பட்டு பணிகளை மழைக்கு முன்பே முடிக்க உத்தரவு

# சென்னையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள்: தலைமைச் செயலாளர் ஆய்வு



சென்னை, ஆக.13–

அரசு தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனாதலைமையில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை குறித்தும் மற்றும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக ஆய்வு கூட்டம் நேற்று (12–ந் தேதி) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக கடந்த 15 நாட்களுக்குள் நடைபெற்ற பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளின் தற்போதைய உண்மை நிலை குறித்து ஒரு பிரத்யேக குழு மூலம் தகவல் பெற்று ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வில் 62 இடங்களில் தடுப்பாண் அமைத்தல், மின்சார கம்பங்கள் மாற்றுதல், குடிநீர் குழாய் மாற்றியமைத்தல், விடுபட்ட மழைநீர் வடிகால் பணிகளின் நிலை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் தற்போது பேரிடர் மேலாண்மையின் கீழ் நடைபெற்று வரும் பணிகள் 30.9.2023க்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

ஈ.வே.ரா. பெரியார் சாலையில் எழும்பூர் அருகே புனித ஆன்ரோ சர்சிற்கு அருகில் தேங்கும் மழைநீரை கூவம் ஆற்றில் சேர்க்க நெடுஞ்சாலை துறை மற்றும் ரெயில்வே துறையும் இணைந்து குறுக்குக் கல்வெட்டு அமைக்கும் பணியினை துரிதமாக முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

## சாலைப்பணிகள்

மேலும், சென்னை மாநகராட்சி பகுதிகளில் மற்றும் உட்புற தெருக்களில் புதிய சாலைகள் அமைக்க 506 சிப்பங்களில் 1,473 கிலோமீட்டர் நீளத்திற்கு 8,862 சாலைகளில் ரூ.908.08 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 430 சிப்பங்களில் 7,848 சாலைகளில் 1,243 கிலோமீட்டர் சாலைகள் ரூ.821 கோடியில் அமைக்க பணியாணை வழங்கப்பட்டதில் 335 கிலோமீட்டர் நீளத்திற்கு 2,012 எண்ணிக்கையில் சாலைப்பணிகள் ரூ.240 கோடி செலவினத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், சேக்காடு அண்ணாநகர் பிரதான சாலை வலம்புரி விநாயகர் கோவில் அருகில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை 15.09.2023க்குள் முடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

தாம்பரம் மாநகராட்சியில் குருசாமி பிரதான சாலை, பல்லாவரம் துரைப்பாக்கம் 200 அடி சுற்றுவட்டச்சாலை மற்றும் பிற இடங்களில் நடைபெற்று வரும் பணியினை 30.9.2023க்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

நீர்வளத்துறையின் மூலம் எட்டு எண்ணிக்கை பணிகள் 250 கோடி மதிப்பில், பள்ளிக்கரணை அணைஏரி, மணலி புதுநகர், கொளத்தூர் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, போரூர் ஏரி, உபரி நீர் கால்வாய் ஆகிய பணிகளை விரைந்து 15.9.2023க்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும், ஓட்டேரி கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், பக்கிங்காம் கால்வாய் ஆகிய பகுதிகளில் ஆகாயதாமரை அகற்றுதல் மற்றும் தூர்வாரும் பணிகள் மற்றும் அடையாறு, கூவம் மற்றும் எண்ணூர் முகத்துவாரம் பகுதிகளில் மணல் திட்டுகளை அகற்றி மழைநீர் விரைவாக வடிக்க ஏதுவாக பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், நடப்பாண்டு பருவமழைக்கு முன்னரே பொதுமக்களின் சிரமத்தை தவிர்க்கும் வகையில் சென்னை மாநகராட்சி, பிற மாநகராட்சிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை மூலம் நடைபெற்று வரும் அனைத்து மழைநீர் வடிகால் பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

பணிகள் நடைபெறும் பொழுது பல்வேறு துறைகளால், பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளில் பொதுமக்கள் பாதுகாப்பு கருத்திற்கொண்டு பேரிகாட் அமைத்து அதன் மீது பச்சை துணி கொண்டு மூடி பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

குறிப்பாக, அனைத்து சேவைத்துறையினர் ஆகிய மின்சார வாரியம், ரெயில்வே, மெட்ரோ இரயில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, நீர்வள ஆதார அமைப்பு துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.



சிதம்பரம் குறுவட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களையும், பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் டி.பிரபாகர், வி.அருண் பாண்டியன் ஆகியோரை தாளாளர் வீனஸ் குமார், பள்ளியின் முதல்வர் ரூபியால் ராணி, பள்ளியின் தலைமைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி மற்றும் பள்ளியின் துணை முதல்வர் அறிவழகன் ஆகியோர் பாராட்டி ஊக்குவித்தனர்.

# மாமல்லபுரத்தில் 2வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழா: அமைச்சர் அன்பரசன் துவக்கி வைத்தார்



சென்னை, ஆக.13–

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியாருடன் இணைந்து மாமல்லபுரத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடற்கரை காட்சி (ஓசன் வீயூ) திடலில் நேற்று (12 ந்தேதி) முதல் 15–ந் தேதி வரை 4 நாட்கள் நடைபெறும் 2வது தமிழ்நாடு சர்வதேச காத்தாடி திருவிழாவினை காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் முன்னிலையில் செங்கல்பட்டு கலெக்டர் ராகுல் நாத் தலைமையில் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் த.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார்.

கடந்த ஆண்டு காத்தாடி விழாவில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டார்கள்.

சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான தொடர் நடவடிக்கைகளால் கொரோனாவிற்கு பிறகு 2021–ம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023–ல் ஜூன் மாதம் வரை 6 மாத காலத்தில் மட்டும் 5,27,072 ஆக உயர்ந்துள்ளது. இதேபோன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021 ல் 11,53,36,719 ஆக இருந்து 2022–ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023–ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் 14,48,16,003 என உயர்ந்துள்ளது.

தாய்லாந்து, இந்தோனேசியா, பிரான்ஸ், வியட்நாம், சீனா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இந்தியா உள்ளிட்ட 8 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச காத்தாடி அணிகள் 200க்கும் மேற்பட்ட காத்தாடிகளுடன் கலந்து கொள்ள உள்ளன.

இந்த ஆண்டு காத்தாடி விழாவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "அலைகளின் சிறகுகள், கடல்வாழ் உயிரினங்களை காப்பாற்றுங்கள், தாய் பூமியைக் காப்பாற்றுங்கள்" என்ற கருப்பொருளை மையமாக கொண்டு, பல்வேறு கடல் விலங்குகள் வடிவத்திலான காத்தாடிகள் பறக்க விடப்பட்டன. இந்த விழாவினையொட்டி காத்தாடி காட்சிப் பெட்டிகள், நேரடி இசை நிகழ்ச்சிகள், உணவுக் கடைகள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்கான பிரத்யேகப் பகுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

காத்தாடி திருவிழாவிற்கு முன்னோட்டமாக கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமிக்கும் பகுதியில் ஆகஸ்ட் 4 முதல் 6 வரை 3 நாட்களுக்கு காத்தாடிகளின் அணிவகுப்பு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

காத்தாடி விழாவில் சிறுவர்களுக்கு அனுமதி இலவசம். மேலும், விவரங்களுக்கு www.tnikf.com ஆன்லைன் முகவரியில் முன்பதிவு செய்து நுழைவு சீட்டு பெற்றுக் கொள்ளலாம். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, சுற்றுலா இயக்குநர் சந்தீப் நந்தூரி, சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் பாரதிதேவி, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன், மாவட்ட சுற்றுலா அலுவலர் சக்திவேல், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்,



# திரு.வி.க.நகர், அண்ணா நகர், ராயபுரம், தேனாம்பேட்டையில் மழைநீர் வடிகால் பணிகள்: முதன்மைச் செயலாளர் ஆய்வு

பருவமழைக்கு முன்னதாக முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவு

சென்னை, ஆக.13–

சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர், அண்ணா நகர், ராயபுரம் மற்றும் தேனாம்பேட்டை மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் சென்னை மாநகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை நகராட்சி நிருவாகத் துறை அரசு முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பருவமழைக்கு முன்னதாக அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 67க்கு உட்பட்ட ஜி.கே.எம். காலனி பிரதான சாலையில், மூலதன நிதி ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினைகளையும், எஸ்.ஆர்.பி. கோவில் வடக்கு சாலையில் கொசஸ்தலை ஆறு வடிநில திட்டத்தின்கீழ் ரூ.86 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும்,

பல்லவன் சாலையில் கொசஸ்தலை ஆறு வடிநில திட்டத்தின்கீழ் ரூ.15.40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், அம்பேத்கர் கல்லூரி சாலையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் ரூ.3.45 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியிகளையும்,

தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட அண்ணா சாலையில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளையும் அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மழைநீர் வடிகால் பணிகளை தரமாகவும், உரிய பாதுகாப்புடனும் வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக, விரைந்து முடித்திடவும், விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகளையும் விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, அண்ணா நகர் மண்டலத்திற்குட்பட்ட பி.எச். சாலை, நியூ ஹோப் மருத்துவமனை மற்றும் பி.எச். சாலை ஈகோ பார்க் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியிகளையும், சேத்துப்பட்டில் உள்ள திடக்கழிவு மேலாண்மைத்துறையின் உயிரி எரிவாயு நிலையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட காந்தி இர்வின் பாலத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியிகளையும், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆதித்தனார் சாலையில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை ஆணையாளர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாக துறை அரசு முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு போக்குவரத்துக்கு இடையூறின்றி பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, செம்பியம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அங்கு வருகை புரிந்த பொது மக்களிடம் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும், அங்குள்ள மருந்தகத்தில் மருந்துகளின் இருப்பு குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, இணை ஆணையர் (பணிகள்) ஜி.எஸ். சமீரன், துணை ஆணையாளர்கள் ஷேக் அப்துல் ரஹ்மான், எம்.சிவகுரு பிரபாகரன், திரு.வி.க.நகர் மண்டல குழுத் தலைவர் சரிதா மகேஷ்குமார், தலைமைப் பொறியாளர் (பொது) எஸ். இராஜேந்திரன், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.


(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)

**ஐபி ரிங்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : D-11/12, தொழிற்பேட்டை, மறைமலை நகர் – 603 209.
தொலைபேசி: 044-2745 2816 இமெயில்: iprmmn@iprings.com இணையதளம்: www.iprings.com
CIN : L28920TN1991PLC020232

**ஜூன் 30, 2023 உடன் முடிந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை**

(ரூ. லட்சத்தில், ஒரு பங்கிற்கான வருமானம் தவிர)

| வ. எண். | விபரங்கள் | தனியானது | | | | ஒருங்கிணைந்தது | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 30.06.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (குறிப்பு 4ஐ பார்க்கவும்) | 30.06.2022 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2023 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | 30.06.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2023 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (குறிப்பு 4ஐ பார்க்கவும்) | 30.06.2022 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | 31.03.2023 அன்றுடன் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம் | 7,752.48 | 7,656.23 | 8,004.05 | 32,663.79 | 7,752.48 | 7,656.23 | 8,004.05 | 32,663.79 |
| 2 | நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன்) | (191.87) | (195.76) | 326.88 | 238.62 | (191.87) | (195.76) | 326.88 | 238.62 |
| 3 | நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்கு முன் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | (191.87) | (195.76) | 326.88 | 238.62 | (184.75) | (188.80) | 314.33 | 231.80 |
| 4 | நிகர லாபம் / (நஷ்டம்) இக்காலகட்டத்தில் வரிக்குப்பின் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | (122.18) | (139.52) | 229.21 | 173.60 | (115.06) | (132.56) | 216.66 | 166.78 |
| 5 | மொத்த விரிவான வருமானம் இக்காலகட்டத்தில் [இக்காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்குப்பின்) மற்றும் இதர விரிவான வருமானத்தை (வரிக்குப்பின்) உள்ளடக்கியது] | (123.94) | (170.25) | 249.50 | 166.73 | (116.82) | (163.29) | 236.95 | 159.91 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,267.59 | 1,267.59 | 1,267.59 | 1,267.59 | 1,267.59 | 1,267.59 | 1,267.59 | 1,267.59 |
| 7 | பிற சம பங்குங்கள் | | | | 9,831.01 | | | | 9,822.32 |
| 8 | பங்கு ஒன்றிற்கு ஈட்டிய வருமானம் (ஒவ்வொன்றும் ரூ.10/–) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுக்காக) | | | | | | | | |
| | அடிப்படை | (0.96) | (1.10) | 1.81 | 1.37 | (0.91) | (1.05) | 1.71 | 1.32 |
| | இளகியது | (0.96) | (1.10) | 1.81 | 1.37 | (0.91) | (1.05) | 1.71 | 1.32 |

**தணித்துள்ள குறிப்புகள்:**

1. மேலே குறிப்பிட்டுள்ள தணித்துள்ள நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் இயக்குநர் குழுவால் ஆகஸ்ட் 12, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவலானது மார்ச் 31, 2023 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட சாரம் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயம் (IND AS)க்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு, தலைமை செயல்பாட்டு முடிவு செய்பவராக இருப்பதால் ('CODM'), உள் வணிக அறிக்கை முறையை அடிப்படையாக கொண்டு, நிறுவனத்திற்கு ஒரே ஒரு பிரிவு மட்டுமே என்பதை அடையாளம் கண்டுள்ளது, அதாவது ஆட்டோ உபகரணங்கள் – பிஸ்டன் ரிங்ஸ், வேறுபாட்டுநுட்ப கியர்கள், போல் வீல் மற்றும் பிற டிரான்ஸ்மிஷன் பாகங்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையாகும். அதன்படி, IND AS 108ன் (நடவடிக்கை பிரிவுகள்) இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. 2022–2023 நிதியாண்டிற்கான ஈவுத்தொகையாக ரூ. 1/– சமபங்கு ஒன்றிற்கு (தலா ரூ. 10/– முகமதிப்புக்கொண்ட சம பங்கிற்கு) என இயக்குநர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அதை ஆகஸ்ட் 12, 2023 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
4. மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டின் மேலே குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும், டிசம்பர் 31, 2022ல் முடிவடைந்த 9 மாதங்களுக்கான வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன்செய்யப்பட்ட இலக்கங்கள் ஆகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
5. முந்தைய கால இலக்கங்கள் இக்கால கட்டத்தோடு உறுதிசெய்யும் வகையில் தேவைப்படும் இடத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

**தொகுக்கப்பட்ட குறிப்புகள்:**

1. மேலே குறிப்பிட்டுள்ள தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு மற்றும் இயக்குநர் குழுவால் ஆகஸ்ட் 12, 2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலே வழங்கப்பட்டுள்ள மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவலானது மார்ச் 31, 2023 ஆண்டு முடிந்த தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட சாரம் ஆகும். இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம், 2013ன் பிரிவு 133ன் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி இந்திய கணக்கியல் தர நிர்ணயம் (IND AS)க்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.
2. நிறுவனத்தின் முக்கிய வணிகம் ஆட்டோ உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகும். இதர குறிப்பிடக்கூடிய பிரிவுகள் ஏதுமில்லை.
3. 2022–2023 நிதியாண்டிற்கான ஈவுத்தொகையாக ரூ. 1/– சமபங்கு ஒன்றிற்கு (தலா ரூ. 10/– முகமதிப்புக்கொண்ட சம பங்கிற்கு) என இயக்குநர்கள் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அதை ஆகஸ்ட் 12, 2023 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
4. மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டின் மேலே குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் முழு நிதியாண்டின் தணிக்கை செய்யப்பட்ட இலக்கங்களுக்கும், டிசம்பர் 31, 2022ல் முடிவடைந்த 9 மாதங்களுக்கான வெளியிடப்பட்ட தேதி வரையிலான இலக்கங்களுக்கும் இடையே முறையே சமன்செய்யப்பட்ட இலக்கங்கள் ஆகும். இது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் வரம்பு வரையான ஆய்வுக்கு உட்பட்டது.
5. இது தணிக்கை செய்யப்படாத தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் ஐபி ரிங்ஸ் லிமிடெட் (நிறுவனம் அல்லது பெற்றோர்) மற்றும் இணைய நிறுவனம் IPR எமினாக்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனத்தின் முடிவுகள் உள்ளடங்கியது.
6. முந்தைய கால இலக்கங்கள் / இக்கால கட்டத்தோடு உறுதிசெய்யும் வகையில் தேவைப்படும் இடத்தில் ஒன்றுசேர்க்கப்பட்டு / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பான காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையின் முழு வடிவம் மும்பை பங்குச் சந்தையின் இணையதளத்திலும் (**www.bseindia.com**), நிறுவனத்தின் இணையதளத்திலும் (**www.iprings.com**) காணப்பெறலாம்.

ஐபி ரிங்ஸ் லிமிடெட்டுக்காக
**A. வெங்கடரமணி**
நிர்வாக இயக்குனர்

இடம் : சென்னை
நாள் : ஆகஸ்டு 12, 2023